
வினா

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| விருந்துக்கு | ஆசைப்பட்டாள் |
| முத்துமாலை | அணிந்தாள் |
| கவனித்தாள் | வெளியே கிளம்பினாள் |
| வீடு திரும்பினார் | பறித்துக்கொண்டு |
| கழற்றி வைத்தார் | கதறினாள் |

# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 5

Name : ____________________ (    )

Class : Primary 5 ______

Parent's Signature:

Date :

____________________

PAPER
BOOKLET A & B

41 questions
90 marks

Total time for Sections A & B: 1hr 40min

**DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.**
**FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.**
**ANSWER ALL QUESTIONS.**

| BOOKLET | MAXIMUM MARKS | MARKS OBTAINED |
|---|---|---|
| A | 46 | |
| B | 44 | |
| TOTAL MARKS | 90 | |

This booklet consists of 6 printed pages.

தமிழ்மொழி

தாள் 1

கட்டுரை

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் <u>ஒன்றுக்கு மட்டும்</u> விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

<u>வினா 1</u>

<u>‘எனது இரகசியம்</u>

மேற்கண்ட தலைப்பில் <u>100 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை/கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்:

- அது என்ன இரகசியம்
- இதை ஏன் நீ இரகசியமாய் வைத்திருக்கிறாய்
- நீ இந்த இரகசியத்தை எவ்வளவு நாளாக இரகசியமாக வைத்திருக்கிறாய்
- இதை இரகசியமாக வைத்திருப்பதால் உன் மனநிலை எப்படி உள்ளது

**Q1** முதல் **Q23** வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

மாறன் குறும்புக்காரச் சிறுவன். ஒருநாள் ஆங்கில வகுப்பு முடிந்த பிறகு அவன் (Q1) ________ எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருந்தான். அப்போது மாறனின் அறிவியல் ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார். அறிவியல் ஆசிரியர் முதலில் மாறன் கையடக்கத்தொலைபேசியைப் பயன்படுத்துவதைக் கவனிக்கவில்லை. அவருடைய கவனம் அன்றைய (Q2) ________ இருந்தது. மாறனும் ஆசிரியர் வருவதைக் கவனிக்கவில்லை. (Q3) ________ நண்பன் லிம் எங் மாறனை எச்சரிக்க முயற்சி செய்வதைக் கண்ணுற்ற ஆசிரியர் மாறனின் அருகில் சென்றார். மாறன் தொடர்ந்து கையடக்கத்தொலைபேசியைப் பயன்படுத்த முயல்வதைக் கண்டு அவர் கோபமுற்றார். "(Q4) ________!" என்று அவர் அதட்டியதைக் கேட்டு மாறன் திடுக்கிட்டான். (Q5) ________ தெரியாமல் செய்ய வேண்டிய ஒன்றை அவர் கண் முன்னே செய்து மாட்டிக்கொண்டதை எண்ணி மாறன் தன்னை நொந்துகொண்டான். ஆசிரியர் மாறனின் கையடக்கத்தொலைபேசியை அவனது (Q6) ________ பிடுங்கினார். மாறன் செய்வதறியாது தவித்தான்.

Q1
(1) கையடக்கத்தொலைபேசியை
(2) கையடக்கத்தொலைபேசியின்
(3) கையடக்கத்தொலைபேசிக்கு
(4) கையடக்கத்தொலைபேசியால்

Q2
(1) பாடத்தில்
(2) பாடத்தின்
(3) பாடத்தை
(4) பாடத்துடன்

Q3 (1) அவனது
(2) அவனை
(3) அவனுக்கு
(4) அவனில்

Q4 (1) மாறனுக்கு
(2) மாறா
(3) மாறனது
(4) மாறனை

Q5 (1) ஆசிரியரில்
(2) ஆசிரியருக்கு
(3) ஆசிரியரிடமிருந்து
(4) ஆசிரியரோடு

Q6 (1) கைகளால்
(2) கைகளுடைய
(3) கைகளிலிருந்து
(4) கைகளில்

## A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 சிறு ____________ பல் குத்த உதவும்.

(1) குச்சியும்
(2) துரும்பும்
(3) கரும்பும்
(4) சுள்ளியும்

Q8 நிழலின் அருமை ______________ தெரியும்.

(1) வெப்பத்தில்
(2) வெளியில்
(3) அணலில்
(4) வெயிலில்

Q9 கெடுப்பதூஉம் ______________ சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

(1) நல்லாருக்கும்
(2) தீயவருக்கும்
(3) கெட்டார்க்கு
(4) கெட்டவருக்கும்

Q10 மோப்பக் குழையும் ______________ முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(1) அனிச்சம்
(2) அணிந்து
(3) அணியும்
(4) அச்சம்

Q11 எரிகிற விளக்கானாலும் ________________ வேண்டும்.

(1) ஊன்றுகோல்
(2) கொடுங்கோல்
(3) தூண்டுதல்
(4) தூண்டுகோல்

4 ✓

Q12 மகன்தந்தைக்கு ஆற்றும் ____________ இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) சேவை
(2) பணி
(3) உதவி
(4) தொண்டு

3 ✓

(4)

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

சுந்தரபுரி என்னும் ஊரில் மேகநாதன் என்ற ஓர் ஏழை விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் காலை முதல் மாலை வரை கடுமையாக உழைப்பவன். அவன் <u>தன்னலமற்ற</u> இரக்க குணமுடையவன். ஒருநாள் அவன் வழக்கம்போல் தோட்டத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். கிணற்றில் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை வைப்பதற்காக அங்கு ஓர் அறையைக் கட்டி வைத்திருந்தான். அவன் அறைக்குள் சென்றதும் அங்கு இருந்த ஒரு கம்பியில் சட்டையை மாட்டிவிட்டு மண்வெட்டியை எடுத்தான். அப்போதுதான் தன் விரலில் தங்கமோதிரம் அணிந்திருப்பதை அவன் உணர்ந்தான்.

வேலை செய்யும்போது மோதிரம் எங்காவது கழன்று விழுந்துவிடும் என்றெண்ணினான். சற்றும் தாமதிக்காமல், தன்னுடைய மோதிரத்தைக் கழற்றினான். அவன் அதை அறையின் உட்புறத்தில் இருந்த சன்னல் ஓரத்தில் வைத்துவிட்டு வேலை செய்ய ஆரம்பித்தான். மாலையானதும் மேகநாதன் வேலை முடிந்து களைப்புடன் வீடு திரும்பினான். ஆனால் அவன் சன்னல் பக்கத்தில் வைத்திருந்த மோதிரத்தை எடுக்க மறந்துவிட்டான்.

தன் வீட்டை அடைந்த பிறகே, அவனுக்கு மோதிரத்தின் <u>ஞாபகம்</u> வந்தது. அவ்விடத்திற்கு யாரும் செல்லமாட்டார்கள், மோதிரம் பத்திரமாக இருக்கும், மறுநாள் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று அவன் எண்ணினான். மறுநாள் காலையில் மேகநாதன் வழக்கம்போல வேலைக்குப் புறப்பட்டான். மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பும்போது மோதிரத்தின் ஞாபகம் அவனுக்கு வந்தது. உடனே அவன் அறைக்குள் சென்றான். அங்கிருந்த சன்னலின் அருகே சென்றதும் அங்கு குருவியொன்று கூடு கட்டியிருந்ததைக் கவனித்தான். அக்கூட்டில் குஞ்சுகள், "கீச்! கீச்!" என்று கத்தின.

கூட்டைக் கலைக்க மேகநாதனுக்கு மனம் வரவில்லை. அதனைக் கலைக்காமல் மோதிரத்தை எடுக்கவும் அவனால் முடியாது. தாய்க்குருவி, “என் கூட்டைக் கலைக்காதே” என்று கெஞ்சுவதுபோல் அவனைப் பார்த்தது. மேகநாதன் மனம் இளகி மோதிரத்தை எடுக்காமல் வீடு திரும்பினான். இவ்வாறு சில நாட்கள் சென்றன.

ஒருநாள் சன்னல் அருகில் குருவிக்குஞ்சுகளின் சத்தம் கேட்காததால் மேகநாதன் அதனருகே சென்று பார்த்தான். குருவிக்கூடு கலைந்திருந்தது. குருவிக்குஞ்சுகள் இறக்கை முளைத்து வேறு இடத்திற்குச் சென்றுவிட்டன என்பதை அவன் உணர்ந்தான். அவன் மோதிரத்தை எடுக்க முயன்றபோது, தன் தங்க மோதிரத்தோடு ஒரு வைர மோதிரமும் இருப்பதைக் கண்டான். குருவிகள் தனது கருணை செயலுக்காக அளித்த பரிசை எண்ணி மேகநாதன் உள்ளம் நெகிழ்ந்தான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. மேகநாதன் ஏன் மோதிரத்தைக் கழற்றி வைத்தான்?

(1) அது கனமாக இருந்ததால்

(2) அது அவனுக்குப் பிடிக்காததால்

(3) அது தொலைந்துவிடும் என்பதால்

(4) அது திருட்டுப் போய்விடும் என்பதால்

Q14. வீடு திரும்பிய மேகநாதன் ஏன் உடனே மோதிரத்தை எடுக்கச் செல்லவில்லை?

(1) தோட்டம் வெகு தூரத்தில் இருந்ததால்

(2) மோதிரம் விலை மதிப்பற்றதாக இருந்ததால்

(3) மோதிரம் தொலைந்துபோயிருக்கும் என்பதால்

(4) மோதிரம் பத்திரமாக இருக்கும் என்பதால்

Q15. எதனால் மேகநாதன் குருவிக்கூட்டைக் கலைக்கவில்லை?

(1) குருவிக் குஞ்சுகளின் மீது பரிவு ஏற்பட்டதால்

(2) தனக்கு மோதிரம் வேண்டாம் என்று நினைத்ததால்

(3) குருவிகள் கொத்திவிடும் என்று அஞ்சியதால்

(4) மோதிரம் காணாமல் போய்விட்டதால்

Q16. குருவிக்கூடு கலைந்திருந்தது மேகநாதனுக்கு எதை உணர்த்தியது?

(1) குருவிக் குஞ்சுகள் இறந்து போனதை

(2) குருவிக் குஞ்சுகள் பெரிதாகி பறந்து போனதை

(3) குருவிக் குஞ்சுகள் விரட்டப்பட்டதை

(4) குருவிக் குஞ்சுகள் மோதிரத்தைத் தூக்கிச் சென்றதை

Q17. குருவி ஏன் மேகநாதனுக்குப் பரிசளித்தது?

(1) அவனுடைய ஏழ்மையைப் போக்குவதற்காக

(2) அவனுடைய கருணை உள்ளத்திற்காக

(3) அவன் கூட்டைப் பாதுகாத்ததற்காக

(4) அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. தன்னலமற்ற

(1) கர்வமற்ற
(2) கருணையற்ற
(3) பொதுநலமற்ற
(4) சுயநலமற்ற

Q19. ஞாபகம்

(1) நினைவு
(2) சிந்தனை
(3) யோசனை
(4) கவனம்

Q20. கலைக்க

(1) கொல்ல
(2) அழிக்க
(3) குலைக்க
(4) எடுக்க


B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

லிங் சூ காங் சமூக மன்றத்தின் ஏற்பாட்டில்

# துரித நடை மற்றும் காலை யோகாசனம்

நாள்: மார்ச் 14 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை மணி 8
இடம்: புளோக் 767 பக்கத்திலுள்ள விளையாட்டு மைதானம்
கட்டணம்: $2



ஆரோக்கியமாக இருப்போம்

சிறப்பு அம்சம்
கவர்ச்சியான
அதிர்ஷ்டக் குலுக்குப்
பரிசுகள் வெல்ல
வாய்ப்புண்டு



இந்த நிகழ்ச்சியில்
எங்கள் மக்கள் நற்பணி
மன்றத்தின்
உறுப்பினராகச் சேர
வாய்ப்புண்டு

நிகழ்ச்சிக்கான முன்பதிவுக்கு : லிங் சூ காங் சமூக மன்றம், மார்ச் 8–ஆம் தேதியிலிருந்து தினமும் மதியம் 2 முதல் இரவு 10 மணி வரை, ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து

***இந்நிகழ்ச்சிக்கு ஆதரவு சுகாதார மேம்பாட்டு வாரியம்***

**Q21** முதல் **Q23** வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. துரித நடை மற்றும் யோகாசன நிகழ்ச்சி எத்தனை மணிக்குத் துவங்கும்?

(1) சனிக்கிழமை காலை 8 மணிக்கு
(2) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு
(3) சனிக்கிழமை இரவு 8 மணிக்கு
(4) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு

Q22. இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சம் என்ன?

(1) குறைந்த கட்டணத்திற்கு நிறைவான நடவடிக்கைகள்
(2) கவர்ச்சியான அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகள் பெறும் வாய்ப்பு
(3) மக்கள் நற்பணி மன்றத்தின் உறுப்பினராகச் சேரும் வாய்ப்பு
(4) பலவிதமான உணவுப் பண்டங்களைச் சுவைக்கும் வாய்ப்பு

Q23. கீழ்க்காணும் வாக்கியங்களில் எது சரியானது?

(1) இந்நிகழ்ச்சியில் பங்குபெறும் நபர்கள் நற்பணி மன்றத்தின் உறுப்பினராகச் சேர்ந்துகொள்ளலாம்.
(2) நிகழ்ச்சிக்காக மார்ச் 7–ஆம் தேதி முன்பதிவு செய்துகொள்ளலாம்.
(3) நிகழ்ச்சியில் பங்குபெறும் நபர்கள் மெதுவோட்டம் மற்றும் துரித நடையில் ஈடுபடுவர்.
(4) நிகழ்ச்சியில் பங்குபெறும் அனைவருக்கும் நினைவுப்பரிசு உண்டு.

## ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் **Q24** முதல் **Q28** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

24. என் தாயார் சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வந்தார். அவற்றை ________________ சுவையான கறி சமைத்தார். 24. ( )

25. நமது பிரதமர் தொழிலாளர் தினத்தன்று ________________ நிகழ்த்தினார். அதனைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார்கள். 25. ( )

26. இடையன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு புல்வெளிக்குச் சென்றான். அங்கு அவை இலை ________________ மேய்ந்தன. 26. ( )

27. புலி மானை அடித்து வீழ்த்தியது. பின்னர் அதன் __________ உண்டு மகிழ்ந்தது. 27. ( )

28. ராமு தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான். கோபம் கொண்ட ஆசிரியர் அவனை அறையின் ________________ நிற்க வைத்தார். 28. ( )

| | |
|---|---|
| (1) மூளையில் | (2) அறிந்து |
| (3) தழைகளை | (4) ஊனை |
| (5) அரிந்து | (6) தலைகளை |
| (7) ஊணை | (8) உறை |
| (9) உரை | (10) மூலையில் |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் **Q29** முதல் **Q35** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. **(14** மதிப்பெண்கள்)

புகலூர் என்ற ஊரில் மணிவண்ணன் என்பவருக்கு எழிலன் என்ற மகன் இருந்தான். நற்பண்புகள் நிறைந்தவனாக விளங்கிய அவனைக் கண்டு தந்தை மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அவர் மகிழ்ச்சி பல நாட்கள் (Q29)__________ தீய நண்பர்களின் (Q30)__________ அவனுக்கு ஏற்பட்டது. இதை அறிந்த மணிவண்ணன், "மகனே! தீயவரைக் காண்பதுவும் தீது என்பார்கள். நீயோ தீயவர்களுடன் நட்பு வைத்து இருக்கிறாய். அவர்களின் நட்பை (Q31)__________," என்று அறிவுரை கூறினார்.

"அப்பா, நான் எந்த (Q32)__________ கெட்டுப் போகமாட்டேன். என் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. என் நண்பர்கள் தீயவர்கள் என்பதற்காக அவர்கள் நட்பை என்னால் விட முடியாது," என்று (Q33)__________ எழிலன் சொன்னான். எழிலனை எப்படி (Q34)__________ என்று மணிவண்ணன் சிந்திக்கத் தொடங்கினார். கடைத்தெருவிற்குச் சென்று திரும்பிய அவர் எழிலனை அழைத்து, "பத்து ஆப்பிள் பழங்கள் வாங்கினேன். அதில் ஒரு பழம் மட்டும் சிறிதளவு (Q35)__________ உள்ளது. எல்லாப் பழங்களையும் ஒரு கூடைக்குள் வை," என்றார். அவனும் அவ்வாறே செய்தான்.

Q29 (   )
Q30 (   )
Q31 (   )
Q32 (   )
Q33 (   )
Q34 (   )
Q35 (   )

| | | |
|---|---|---|
| (1) ஆனது | (2) அழகாக | (3) விட்டுவிடு |
| (4) நீடிக்கவில்லை | (5) சூழ்நிலையிலும் | (6) உறுதியாக |
| (7) வாழ்க்கையிலும் | (8) திருத்துவது | (9) தொடர்பு |
| (10) அழுகி | (11) மாற்றவேண்டும் | (12) பழுதாகி |

D8. சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

ஓர் ஊரில் எலிகளின் மாநாடு நடந்தது. தலைமை எலி எழுந்து, 'அன்பர்களே! நம் கொடிய பகைவர்களாகப் பூனைகள் உள்ளன. நாள்தோறும் நம்மைக் கொன்று தின்கின்றன. இப்படியே சென்றால் நம் இனம் முழுவதும் அழிந்துவிடும். இதற்குத் தக்க மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். பூனைகளிடம் இருந்து தப்பிக்க வழி கண்டே ஆக வேண்டும். உங்களுக்குத் தெரிந்த வழிகளைச் சொல்லுங்கள். அதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டு உள்ளது" என்று சொல்லி அமர்ந்தது.

பிறகு, எலிகள் ஒவ்வொன்றாக மேடைக்கு வந்தன. பூனைகளிடம் இருந்து தப்பிக்கத் தங்களுக்குத் தெரிந்த வழிமுறைகளைச் சொல்லின. கடைசியாகக் குட்டி எலி ஒன்று மேடை ஏறியது. "பூனையிடமிருந்து நம் இனம் தப்பிக்க அருமையான வழி உள்ளது. பூனை வருவது நமக்குத் தெரியாததால்தான் நாம் அதனிடம் சிக்கிக் கொள்கிறோம். முன்னரே தெரிந்துவிட்டால் நாம் பாதுகாப்பாக வளைக்குள் பதுங்கிக் கொள்ளலாம். பூனையின் கழுத்தில் மணி கட்டி விட்டால் போதும். அது வரும் போதெல்லாம் மணியோசைக் கேட்கும். அந்த ஓசை கேட்டவுடன் நாம் தப்பித்துக் கொள்ளலாம்" என்று ஆரவாரமாகச் சொன்னது. இதைக் கேட்ட எல்ல எலிகளும் கை தட்டி ஆரவாரம் செய்தன.

"பூனைகள் கொட்டம் ஒழிந்தது. இனி நமக்கு எந்தக் கவலையும் இல்லை. அச்சம் இன்றி வாழலாம்" என்று முழக்கம் செய்தது ஒரு எலி. அப்பொழுது கிழ எலி ஒன்று மேடைக்கு வந்தது. "குட்டி எலி சொன்ன திட்டம் நல்ல திட்டம்தான். நடைமுறைப்படுத்த இயலாத திட்டம். ஆகவே அந்தத் திட்டத்தால் நமக்கு எந்தப் பயனும் இல்லை" என்றது.

கோபம் கொண்ட எலிகள், " அந்தத் திட்டத்தில் என்ன குறை? குட்டி எலி பேரும் புகழும் பெறுவது உமக்குப் பிடிக்கவில்லை. பொறாமையால் இப்படிப் பேசுகிறாய். மேடையை விட்டு இறங்கு" என்று கத்தின.

உடனே அந்தக் கிழ எலி, " பூனையின் கழுத்தில் மணி கட்டுவது யார்? திட்டத்தைச் சொன்ன குட்டி எலியா? அல்லது நீங்களா? நாம் மணி கட்டும்போது பூனை பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? நம்மைக் கொன்று தின்று விடாதா? அதன் அருகில் செல்ல நம்மில் யாருக்கேனும் துணிச்சல் உள்ளதா? இயலாத செயலைப் பேசிப் பயன் என்ன? உள்ளதைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் தான் வரும்" என்று எரிச்சலுடன் சொன்னது. செய்ய இயலாத காரியத்திற்கு வீணாக மகிழ்ந்தோமே என்று வருந்தின எலிகள். எலியின் மாநாடு எந்தப் பயனுமின்றி முடிந்தது.

வினாக்களுக்குப் பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது .(20 மதிப்பெண்கள்)

36. எலிகளின் மாநாடு எதற்கு அமைக்கப்பட்டது ? (3)

37. எலிகள் பூனையிடம் மாட்டிக் கொள்ளக் காரணம் என்ன? (3)

38. எலிகள் பாதுகாப்பாக வாழ என்ன செய்ய வேண்டும்? (3)

39. கிழ எலி ஏன் குட்டி எலியின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை? (4)

40. எவை முடியாத் செயல்கள் என்று கிழ எலி கூறிற்று? (4)

41. எலிகளின் கவலைக்குக் காரணம் என்ன (3)

**P5 SA2**
**TESTPAPER 2**

Primary - 6

மாறன் குறும்புக்காரச் சிறுவன்.......

1. 1 2. 1 3. 1 4. 2 5. 2 6. 3

7. 2 8. 4 9. 3 10. 1 11. 4 12. 3

13. 3 14. 4 15. 1 16. 2 17. 2

18. 4 19. 1 20. 2

21. 2 22. 2 23. 1

24. 5 25. 9 26. 3 27. 4 28. 10

29. 4 30. 9 31. 3 32. 5 33. 6 34. 8 35. 10

36. பூனைகளிடமிருந்து தப்பிப்பதற்கு மற்ற எலிகளிடமிருந்து வழிகளைத் தெரிந்துகொள்வதற்காகவே எலிகளின் மாநாடு அமைக்கப்பட்டது.

37. பூனையின் வருகை எலிகளுக்கு முன்கூட்டியே தெரியாததே அவை பூனையிடம் மாட்டிக் கொள்ளக் காரணமாகும்.

38. பூனையின் கழுத்தில் மணி கட்டி விட்டால் அது வரும் போதெல்லாம் மணியோசை கேட்பதோடு அந்தச் சத்தத்தைக் கேட்ட உடனே எலிகள் வளைக்குள் சென்று பதுங்கித் தப்பித்துக் கொள்ளலாம். இதுவே எலிகள் பாதுகாப்பாக வாழச் செய்ய வேண்டியதாகும்.

39. குட்டி எலியின் திட்டம் நல்ல திட்டமாக இருப்பினும், அதை நடைமுறைப்படுத்த இயலாது என்பதால் கிழ எலி அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

40. பூனையின் கழுத்தில் மணி கட்டுவது, பூனை எலிகளை கொன்றுவிடாமல் இருப்பது மற்றும் பூனையின் அருகில் செல்லத் துணிவதே கிழ எலி கூறிய இயலாத செயல்களாகும்.

41. செய்ய இயலாத காரியத்திற்காக வீணாக எலிகள் மிகக் களிப்புற்றதே அவற்றின் கவலைக்குக் காரணமாகும்.